## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## பட்டு வளர்ச்சித்துறை

# செயலாக்கத்திட்டம்
## 2009 - 2010

©
தமிழ்நாடு அரசு
2010

# பட்டு வளர்ச்சித்துறை

## 2009–2010ஆம் ஆண்டிற்கான செயலாக்கத்திட்டம்

இந்தியாவில் பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு நான்காவது இடத்தில் உள்ளது. மல்பரி சாகுபடி செலவினத்தை குறைக்கும் வகையில் புதிய தொழில் நுட்ப கண்டுபிடிப்புகள், விவசாயிகளின் அதிக பட்டுக்கூடு உற்பத்திக்கும், கூடுதல் வருமானத்திற்கும் உதவியுள்ளது.

புதிய தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதில் தமிழக விவசாயிகள் முன்னோடியாக திகழ்கின்றனர். இதன் விளைவாக 10–வது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்தில் (2002–2003) பட்டுக்கூடு அறுவடை 100 முட்டைத் தொகுதிகளுக்கு 44.70 கிலோ கிராம் என்றிருந்த நிலை மாறி தற்போது 65.43 கிலோ கிராம் அளவு உயர்ந்துள்ளது. தமிழகம் இந்த வகையில் இந்தியாவிலேயே முன்னிலை வகிக்கிறது.

மாநிலத்தில் தரமான வெண்பட்டு உற்பத்தியை பெருக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 2008–2009ஆம் ஆண்டில் வெண்பட்டு உற்பத்தியில் நாட்டிலேயே தமிழகம் முதலிடம் வகித்தது. தமிழகம், மற்ற மாநிலங்களைவிட அதிகமாக உற்பத்தி செய்த இந்த அரிய சாதனை குறித்து மத்திய பட்டு வாரியம் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளது. 2009–2010ஆம் ஆண்டில் 350.80 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது மாநிலத்தின் மொத்த பட்டு உற்பத்தியில் 28.5 விழுக்காடு ஆகும். இச்சாதனை 2008–2009ஆம் ஆண்டில் அடையப்பட்ட சாதனையான 26.7 விழுக்காட்டை விட அதிகமானது ஆகும். 2009–2010ஆம் ஆண்டிலும் தமிழகம் தொடர்ந்து தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியில் முதல் நிலையை தக்கவைத்துள்ளது.

பட்டு வளர்ச்சித்துறையின் முக்கிய செயல்பாடுகள் குறித்த சாதனை விபரங்கள் அட்டவணை எண்.1 முதல் 12 வரை தரப்பட்டுள்ளது.

## 1. மல்பரி விரிவாக்கம்

2009–2010ஆம் ஆண்டில் 8,031 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 2004–2005ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தின் சாதனை விபரம் வருமாறு:–

| வ. எண். | வருடம் | சாதனை (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | 2004-2005 | 1,768 |
| 2 | 2005-2006 | 2,332 |
| 3 | 2006-2007 | 10,389 |
| 4 | 2007-2008 | 10,411 |
| 5 | 2008-2009 | 10,037 |
| 6 | 2009-2010 | 8,031 |

## 2. இளம்புழு வளர்ப்பு மையங்கள்

விவசாயிகள் இளம்புழுக்களை பயன்படுத்தும் புதிய அணுகுமுறையால் உற்பத்தி திறன் அதிகரித்து, புழு வளர்ப்பில் தோல்வி என்பது மிக மிக குறைவான ஒன்றாக உள்ளது. விவசாயிகள் இளம்புழுக்களை பயன்படுத்துவது குறிப்பிடத் தகுந்த அளவு அதிகரித்துள்ளது. இந்த இனத்தில் தேசிய அளவில் தமிழகம் முதல்நிலையில் உள்ளது. 2004–2005ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தின் சாதனை விபரம் வருமாறு:–

| வ. எண் | வருடம் | மொத்த முட்டைகள் வளர்ப்பு (இலட்சம் முட்டைகள்) | இளம்புழுக்களாக வளர்க்கப்பட்டது (இலட்சம் முட்டைகள்) | விழுக்காடு | இளம்புழு வளர்ப்பு மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 2004-2005 | 55.672 | 6.346 | 11.4 | 11 |
| 2 | 2005-2006 | 88.876 | 21.732 | 24.5 | 19 |
| 3 | 2006-2007 | 130.458 | 32.774 | 25.1 | 24 |
| 4 | 2007-2008 | 154.567 | 40.391 | 26.1 | 34 |
| 5 | 2008-2009 | 152.778 | 41.007 | 26.8 | 35 |
| 6 | 2009-2010 | 131.250 | 35.568 | 27.0 | 42 |

2009–2010ஆம் ஆண்டில்தான் அதிக அளவான 27 விழுக்காடு இளம்புழுக்களாக வளர்க்கப்பட்டு சாதனை அடையப்பட்டுள்ளது.

## 3. பட்டுக்கூடு உற்பத்தி

2009–2010ஆம் ஆண்டில் 8,588 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2004–2005ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தின் சாதனை விபரம் வருமாறு:–

| வ. எண். | வருடம் | சாதனை (மெட்ரிக் டன்னில்) |
|---|---|---|
| 1 | 2004-2005 | 3,101 |
| 2 | 2005-2006 | 5,225 |
| 3 | 2006-2007 | 7,931 |
| 4 | 2007-2008 | 9,676 |
| 5 | 2008-2009 | 9,949 |
| 6 | 2009-2010 | 8,588 |

## 4. 100 முட்டைத் தொகுதிகளுக்கு பட்டுக்கூடு அறுவடை

சமீப ஆண்டுகளாக 100 முட்டைத் தொகுதிகளுக்கு பட்டுக்கூடு உற்பத்தி திறன் அதிகரித்து வருகிறது. இந்த இனத்தில் நாட்டிலேயே தமிழகம் முன்னிலை வகிக்கிறது. 2004–2005 ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தின் சாதனை விபரம் வருமாறு:–

| வ. எண். | வருடம் | 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை (கிலோ கிராம்) |
|---|---|---|
| 1 | 2004-2005 | 58.910 |
| 2 | 2005-2006 | 61.130 |
| 3 | 2006-2007 | 62.430 |
| 4 | 2007-2008 | 63.900 |
| 5 | 2008-2009 | 64.800 |
| 6 | 2009-2010 | 65.430 |

2009–2010ஆம் ஆண்டில்தான் அதிக அளவான 65.43 கிலோ கிராம் பட்டுக்கூடு அறுவடை 100 முட்டைத் தொகுதிகளுக்கு என்பது அடையப்பட்டுள்ளது.

## 5. கச்சாப்பட்டு உற்பத்தி

2009–2010ஆம் ஆண்டில் 1,233 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மொத்த பட்டு உற்பத்தியில், வெண்பட்டு உற்பத்தி 28.5 விழுக்காடு ஆக உயர்ந்து இத்துறையின் வரலாற்றில் எப்போதுமில்லாத சாதனையை எட்டியுள்ளது. 2004–2005ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தின் சாதனை விபரம் வருமாறு:–

| வ. எண் | வருடம் | மொத்த கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | இதில் வெண்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | வெண்பட்டு உற்பத்தி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | 2004-2005 | 443 | 58.70 | 13.3 |
| 2 | 2005-2006 | 739 | 175.60 | 23.8 |
| 3 | 2006-2007 | 1,124 | 296.00 | 26.3 |
| 4 | 2007-2008 | 1,368 | 321.80 | 23.5 |
| 5 | 2008-2009 | 1,411 | 377.15 | 26.7 |
| 6 | 2009-2010 | 1,233 | 350.80 | 28.5 |

2009–2010ஆம் ஆண்டில்தான் மொத்த பட்டு உற்பத்தியில் அதிக அளவான 28.5 விழுக்காடு வெண்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

## 6. பண்ணை வருவாய்

துறையின் மூலம் பல்வேறு தரப்பட்ட நடவடிக்கைகள் பின்பற்றியதின் மூலமாக அரசு பட்டு பண்ணைகளின் வருவாய் அதிகரித்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் வருவாய் கீழே குறிப்பிட்டுள்ள வகையில் இரு மடங்காகியுள்ளது.

| வ. எண். | வருடம் | பண்ணை வருவாய் (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1 | 2004-2005 | 30.918 |
| 2 | 2005-2006 | 39.085 |
| 3 | 2006-2007 | 39.452 |
| 4 | 2007-2008 | 40.202 |
| 5 | 2008-2009 | 51.384 |
| 6 | 2009-2010 | 59.003 |

2009–2010ஆம் ஆண்டில்தான் அதிக அளவான ரூ.59.003 இலட்சம் பண்ணை வருவாய் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

## 7. பட்டு வளர்ச்சி அபிவிருத்தி மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதிக்கு லெவி வசூலித்தல்

கடந்த சில ஆண்டுகளில் லெவி வசூல் கணிசமான அளவு உயர்ந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில் லெவி வசூல் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக வசூலான விபரம் பின்வருமாறு:–.

| வ எண் | வருடம் | லெவி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2004-2005 | 64.38 |
| 2 | 2005-2006 | 81.24 |
| 3 | 2006-2007 | 99.61 |
| 4 | 2007-2008 | 102.68 |
| 5 | 2008-2009 | 133.15 |
| 6 | 2009-2010 | 159.48 |

2009–2010ஆம் ஆண்டில் தான் "பட்டு வளர்ச்சி அபிவிருத்தி மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதி"க்கு அதிக அளவான ரூ.159.48 இலட்சம் லெவி வசூல் சாதனை எட்டப்பட்டுள்ளது.

## 8. மகளிர் பட்டு விவசாயிகளுக்கு நலக்காப்பீடு

2008–2009ஆம் ஆண்டில் மத்திய பட்டு வாரியம் பட்டு விவசாயிகளுக்கான புதிய நலக்காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் தமிழகத்தில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களால் கோவையில் கடந்த 12.12.2008 அன்று தொடங்கிவைக்கப்பட்டது.

சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் வழங்கும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் பயனாளிகளின் குடும்பம் உரிமம் பெற்ற மருத்துவமனைகளில் கட்டணமின்றி சிகிச்சைபெற இயலும். ஆண்டு ஒன்றுக்கு ரூ.15,000/–க்கு வெளிநோயாளி மற்றும் மருத்துவ சிகிச்சை பெறலாம்.

2008–2009 மற்றும் 2009–2010ஆம் ஆண்டுகளில் கீழ்க்கண்டுள்ளவாறு பயனாளிகளின் எண்ணிக்கை அமைந்துள்ளது.

1) 2008–2009 : 1,370 மகளிர்

2) 2009–2010 : 4,000 மகளிர்

## 9. பட்டு நூற்புப்பிரிவை மேம்படுத்துதல்

பட்டு நூற்புப்பிரிவை வலுப்படுத்த பல்வேறு தரப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வகையில் அதிக அளவில் பட்டு நூற்பு அலகுகளை மாநிலத்தில் நிறுவுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட பட்டு நூற்பு அலகுகள் விபரம் கீழ்வருமாறு:–

| வ. எண் | வருடம் | சர்க்கா / மின் மோட்டார் சர்க்கா | | காட்டேஜ் பேசின் அலகு | | பலமுனை நூற்பு அலகு | | தானியங்கி நூற்பு அலகு | | வெப்பக் காற்று உலர்த்தி | தறிகள் | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அலகு | ஏனங்கள் | அலகு | ஏனங்கள் | அலகு | ஏனங்கள் | அலகு | ஏனங்கள் | அலகு | எண்ணிக்கை | அலகு | ஏனங்கள் |
| 1 | 1998-1999 முதல் 2005-2006 | – | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| 2 | 2006-2007 | 62 | 124 | 59 | 323 | – | – | 1 | 40 | – | – | **122** | **487** |
| 3 | 2007-2008 | – | – | 22 | 110 | 14 | 140 | – | – | 5 | – | **41** | **250** |
| 4 | 2008-2009 | – | – | – | – | 5 | 50 | 1 | 40 | 15 | – | **21** | **90** |
| 5 | 2009-2010 | – | – | – | – | – | – | 1 | 40 | 3 | 500 | **4** | **540** |

2004–2005ஆம் ஆண்டில் 1,072 பட்டு நூற்பு ஏனங்களாக இருந்தது, 2009–2010ஆம் ஆண்டில் இருமடங்காக அதிகரித்து 1,901 ஏனங்களாக உள்ளது.

## 10. மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழக அரசு நிதி ஒதுக்கீடு

மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் மூலமாக கடந்த 4 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வகையில் அதிக அளவு நிதி பெறப்பட்டுள்ளதை கீழ்வரும் விபரங்கள் மூலம் அறியலாம். கடந்த 8 ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | வருடம் | மத்திய பட்டு வாரியம் (ரூபாய் இலட்சத்தில்) | தமிழக அரசு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| **1** | **2002-2003** | **45.030** | **30.060** | **75.090** |
| **2** | **2003-2004** | **151.414** | **76.484** | **227.898** |
| **3** | **2004-2005** | **163.124** | **89.520** | **252.644** |
| **4** | **2005-2006** | **149.948** | **93.572** | **243.520** |
| **5** | **2006-2007** | **504.443** | **322.434** | **826.877** |
| **6** | **2007-2008** | **684.014** | **485.133** | **1,169.147** |
| **7** | **2008-2009** | **903.878** | **787.119** | **1,690.997** |
| **8** | **2009-2010** | **829.544** | **574.570** | **1,404.114** |

**11. தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொகுப்பு அணுகுமுறை**

தொகுப்பு அபிவிருத்தி திட்டம் மத்திய பட்டு வாரிய உதவியுடன் 2008–2009ஆம் ஆண்டு முதல் துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டு வளர்ச்சிப்பணிகள், “தொகுப்பு அணுகுமுறை” (Cluster Approach)–யில் கவனம் செலுத்தி செயல்படுத்தப்படும். திட்டங்கள் தொகுப்பு அணுகுமுறையின் முக்கிய பகுதிகளான விதை, பட்டுக்கூடு, பட்டு நூற்பு ஆகிய இனங்களை உள்ளடக்கி செயல்படுத்தப்படுகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் கீழ்க்கண்ட ஆறு தொகுப்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பைவோல்டைன் புழு வளர்ப்பு செய்யப்பட்டு வருகின்றன.

- திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி
- திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை
- ஈரோடு மாவட்டத்தில் கோபிசெட்டிப்பாளையம்
- கிருட்டிணகிரி மாவட்டத்தில் பேரிகை
- கிருட்டிணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை
- திண்டுக்கல் மாவட்டத்தில் சாணார்பட்டி

தொகுப்பு அபிவிருத்தி திட்டத்தில் வெண்பட்டு முட்டை வளர்ப்பு, பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வெண்பட்டு உற்பத்தி ஆகிய அனைத்து இனங்களிலும் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. இத்திட்டத்தின் முன்னேற்றம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வருடம் | வளர்த்த முட்டைத்தொகுதிகள் (இலட்சத்தில்) | பட்டுக்கூடு உற்பத்தி (மெட்ரிக் டன்) | பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்) | 100 முட்டை தொகுதிகளுக்கு அறுவடை (கிலோ கிராமில்) |
|---|---|---|---|---|---|
| **1** | **2008-09** | **4.425** | **289.400** | **44.500** | **65.400** |
| **2** | **2009-10** | **11.051** | **766.737** | **122.670** | **69.400** |

## 12. தினக்கூலிப்பணியாளர்களின் பணிகளை வரன்முறைப்படுத்துதல்

2009–2010ஆம் ஆண்டில் அரசு பட்டு வளர்ப்பு அலகுகளில் பணிபுரிந்து வந்த 520 தினக்கூலி பணியாளர்களின் பணிகள் காலமுறை ஊதியமாக வரன்முறைப்படுத்தப்பட்டு அரசாணை வழங்கப்பட்டுள்ளது. தினக்கூலிப் பணியாளர்களின் இந்த நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது ஒரு மகிழ்ச்சிக்குரிய நிகழ்வு ஆகும்.